Literacy for a Billion

Movie: Thambi Vettothi Sundaram
Year: 2011

Song: Kola gara
Lyricist: Vairamuthu

கொலைகாரா
அனலாச்சு என் மூச்சு
புத்தி மாறி போயாச்சு
அட கொலைகாரா... ஆ...
கொலைகாரி
உன்னை பாத்து உசுர் போச்சு
நின்னுபோச்சு என் மூச்சு
அடி கொலைகாரி
உன் மடியில் சீராட்டு
என் மனசை தாலாட்டு
அந்த அலைமேல்
பாய் போட்டு
என் அழகே நீராட்டு
கொலைகாரா
அனலாச்சு என் மூச்சு
புத்தி மாறி போயாச்சு
அட கொலைகாரா... ஆ...
பாலும் சோறும் உங்காம
பச்சைதண்ணி செல்லாம
இத்து இத்து போனேனே
எச்சி முத்தம் இல்லாம
நெஞ்சாங்கனி தாங்காம
ரெண்டு கண்ணும் தூங்காம
கட்டில் சுகம் காணாம
காமன் செய்யும் நாட்டாமை
பஞ்சில்லாம தீயில்லாம
பத்தவச்ச கள்ளி
புத்திக்குள்ள கத்தி வீசி
போவதென்ன தள்ளி
பச்சவாழை தோப்புக்குள்ள
பந்தி வெக்க வாடி புள்ள
பால்பழங்கள் கூடைக்குள்ள
பத்தியமும் தேவையில்ல
கொலைகாரி ஹோய்

நாஞ்சில்நாட்டு கடலெல்லாம்
உன்னை கண்டு வலைவீசும்
சங்கு முத்து எல்லாமே
தங்கத்தால விலை பேசும்
ஓரக்கரை எல்லாமே
ஒட்டிக்கொள்ளும் மீன்வாசம்
உன்னை மட்டும் தொட்டாலே
மாசம் எல்லாம் பூவாசம்
பாதி கொலை செஞ்சுப்புட்டு
தப்பி செல்லும் மூடா
முத்தமிட்டு மொத்தத்தையும்
கொன்னுப்புட்டு போடா
ஆசை வச்ச பொம்பிளைக்கு
அஞ்சுநாளா தூக்கமில்ல
மீசை வச்ச ஆம்பிளைக்கு
மெத்தை வாங்க நேரமில்ல
கொலைகாரி
உன்னை பாத்து உசுர் போச்சு
நின்னுபோச்சு என் மூச்சு
அடி கொலைகாரி
கொலைகாரா
அனலாச்சு என் மூச்சு
புத்தி மாறி போயாச்சு
அட கொலைகாரா...
உன் மடியில் சீராட்டு
என் மனசை தாலாட்டு
அந்த அலைமேல்
பாய் போட்டு
என் அழகே நீராட்டு

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*